செய்தி வெளியீட்டு எண்: 247 நாள்: 26.07.2021

# பொதுமக்கள் நீர்வரத்து, நீர் வெளியேறும் பாதைகளில், குப்பைகள் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளை வீசுவதை தவிர்க்க வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பி.என்.ஸ்ரீதர், இ.ஆ.ப., அவர்கள் வேண்டுகோள்

கள்ளக்குறிச்சி மாவட்டம், பொதுமக்கள் நீர்வரத்து மற்றும் நீர் வெளியேறும் பாதைகளில், குப்பைகள் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளை வீச வேண்டாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பி.என்.ஸ்ரீதர், இ.ஆ.ப., அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார். கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள பெரிய ஏரி, சித்தேரி வரத்து வாய்க்கால் மற்றும் நீர் வெளியேறும் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் இன்று (26.07.2021) ஆய்வு செய்தார்.

இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளதாவது :

கள்ளக்குறிச்சி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள பொதுப்பணித்துறையின் மூலம் பராமரிக்கப்படும் பெரிய ஏரி, சித்தேரி மற்றும் சித்தேரியின் வரத்து வாய்க்கால் பகுதி கடந்த 28.06.2021 அன்று ஆய்வு செய்யப்பட்டு தூர்வாரும் பணினை மேற்கொள்ள சம்மப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. அதன்படி, இன்று சித்தேரி வரத்து வாய்க்கால் பகுதியில் பொதுப்பணித்துறையின் வாயிலாக தூர்வாரும் பணி நடைபெற்று வருவதை மீள் ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திடவும் பெரிய ஏரியின் அருகே வாய்க்காலில் தூர்வாரும் பணிக்கு இடையூறாக உள்ளவற்றை அகற்றி மழைக்காலம் தொடங்குவதற்கு முன் பணிகளை முடித்திடவும் பொதுப்பணித்துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், பொதுமக்கள் நீர் வரத்து மற்றும் நீர் வெளியேறும் பாதைகளில் குப்பைகள் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளை வீசி எறிய வேண்டாம். மற்றும் மழை நீரை முழுவதும் சேமிக்க மாவட்ட நிர்வாகம் மேற்கொண்டுவரும் அனைத்து பணிகளுக்கும் பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். கள்ளக்குறிச்சி மாவட்டத்தில், நீர் நிலைகளில் ஆக்கிரமிப்புகள் ஏற்படாதவாறு சம்மந்தப்பட்ட அலுவலர்கள் கண்காணிக்க வேண்டும். அவ்வாறு ஆக்கிரமிப்புகள் ஏதேனும் இருப்பின் அவற்றை கண்டறிந்து சம்மந்தப்பட்ட அலுவலர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இவ்வாய்வின்போது பொதுப்பணித்துறை உதவி பொறியாளர்கள் திரு.கணேசன், செல்வி.வினோதினி மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.